## ஈச்சம்பாடி ஜீயர்

ஈச்சம்பாடி என்னும் ஊர் திருமலைக்கு அருகில் உள்ளது. இவருடைய திருத்தகப்பனார் திருமாலிருஞ்சோலை தாஸர் என்னும் திருநாமமுடைய ஸ்ரீஅழகப்பிரான் என்கிற ஸ்ரீசுந்தரதேசிகர். தாயார் பெரிய திருமலை நம்பியின் குமாரத்தி. ஸ்ரீசுந்தரதேசிகர் தம் ஆசார்யரான ஆளவந்தார் நியமனப்படி திருமலையில் பல கைங்கர்யங்கள் பெரிய திருமலை நம்பியைப் போல் திருவேங்கடத்தானுக்குச் செய்து வந்தார்.

இவர் ஈச்சம்பாடி ஆச்சானின் இளைய சகோதரர். இருப்பிடம் - திருமலை

இவருடைய இயற்பெயர் - ஸ்ரீவெங்கடேசன். இவர் திருக்கல்யாணம் ஆன பிறகு தன்னுடைய திருத்தகப்பனார் நியமனப்படி இராமானுஜரை ஆச்ரயித்தார். அவரிடம் எல்லா சாஸ்த்ரங்களையும் கற்ற பிறகு புத்ர, பௌத்ர சிஷ்யாதிகளுடன் தர்சந ப்ரவர்த்தநம் செய்து கொண்டிருந்தார். பின்னர் இவர் ஜ்ஞான பக்தி விரக்தியால் இராமானுஜரிடமே ஸந்யாஸாஸ்ரம ஸ்வீகாரம் பெற்றார். அது முதல் ஈச்சம்பாடி ஜீயர் என்ற பெயருடன் விளங்கிவந்தார். மிகவும் நிஷ்டையுடன் தம் சிஷ்யர்களுக்கு ஸ்ரீபாஷ்ய திவ்ய ப்ரபந்தார்த்தங்கள், ரஹஸ்ய மந்த்ரார்த்தங்கள் எல்லாம் ஸாதித்துக் கொண்டு ந்ருஸிம்ஹன் திருவாராதனத்துடன் எழுந்தருளி இருந்தார் என்பது ப்ரஸித்தம்.

எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிபதிகளில் இவரும் ஒருவர் ஆவார்.

### வாழித்திருநாமம்

ஆனிதனில் ஓணத்தில் அவதரித்தோன் வாழியே
வேங்கடத்தைப் பதியாக விரும்புமவன் வாழியே
பூவார்ந்த கழல்களையே போற்றுமவன் வாழியே
பதின்மர்கலை உட்பொருளை பகருமவன் வாழியே
அனவரதம் அரியுருவன் அடிதொழுவோன் வாழியே
எப்பொழுதும் யதிபதியை ஏத்துமவன் வாழியே
முத்திதரும் முந்நூலும் முக்கோலும் வாழியே
எழில் ஈச்சம்பாடி உறை ஜீயர்தாள் வாழியே.

மேலே சொன்ன விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

ஈச்சம்பாடி ஜீயர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: க்ஷந்தவ்ய: